73

57

சுருக்கம்

சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை – புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் – பணியில் இருக்கும் போது காலமான சத்துணவு அமைப்பாளர், சத்துணவு சமையலர், சமையல் உதவியாளர், குழந்தைகள் மைய பணியாளர், குழந்தைகள் மைய உதவியாளர் ஆகியோரின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்க அனுமதித்து ஆணையிடப்படுகிறது.

சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்ட (சஉதி – 2) துறை

அரசு ஆணை (நிலை) எண்.198

நாள் 25–10–2007

படிக்கப்பட்டது:-

1. அரசு கடித எண்.37910/சஉதி–3/92–2, சமூகநலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை நாள் 06–11–92.
2. அரசாணை (நி) எண்.215, சமூகநலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை நாள் 08–09–1998.
3. அரசு கடித எண்.20/ஜி/02, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை நாள் 29–11–2001.
4. அரசாணை (நி) எண்.61, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை நாள் 19–7–2006.
5. பல்வேறு சத்துணவு பணியாளர் / ஊழியர் சங்கங்களின் கோரிக்கை கடிதங்கள்.

---

ஆணை:-

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தில் பணியாற்றும் சத்துணவு அமைப்பாளர்கள் எவரேனும் தங்கள் பணிக் காலத்தில் காலமாகி விட்டால் அவர்களது குடும்ப வாரிசுதாரர்களில் தகுதியான ஒருவருக்கு கருணை அடிப்படையில் சத்துணவு அமைப்பாளராக நியமனம் செய்ய மனுதாரரின் கல்வித் தகுதி, வயது வரம்பு, வாரிசு உரிமை, குடும்பத்தில் உள்ள பிறர் அரசுப் பணியிலிருப்பது போன்ற விவரங்களை பரிசீலித்து மாவட்ட ஆட்சித் தலைவரின் குறிப்புரை / பரிந்துரையுடன் தக்க முன் மொழிவுகளை அரசுக்கு அனுப்பி அரசின் முன் அனுமதி பெற்று பணி நியமனம் வழங்க மாவட்ட ஆட்சி தலைவர்களுக்கு அனுமதியளித்து மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசுக்கடிதத்தில் ஆணை வெளியிடப்பட்டது.

2. சத்துணவு அமைப்பாளர்களுக்கு வழங்கப்பட்ட கருணை அடிப்படையிலான பணி நியமனச் சலுகையை சத்துணவு திட்ட சமையலர் மற்றும் உதவியாளர்களுக்கும் நீட்டித்து அவர்களின் வாரிசுதாரர்களை அவர்களது வயது வரம்பு, வாரிசு உரிமை, குடும்பத்தில் உள்ள பிறர் அரசு பணியிலிருப்பது போன்ற விவரங்களை ஆய்வு செய்து தகுதிக்கேற்ப அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களே சத்துணவு சமையலர் மற்றும் உதவியாளர் பணியிடங்களில் நியமனம் செய்யலாம் எனவும், பின்னர் அது பற்றிய விவரங்களை உடனடியாக அரசுக்கு தெரிவிக்க வேண்டும் எனவும் மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணை வெளியிடப்பட்டது.

3. இந்நிலையில் மேலே மூன்றில் படிக்கப்பட்ட அரசுக் கடிதத்தில் அரசுப் பணியாளர்களுக்கு வழங்கப்பட்ட கருணை அடிப்படையிலான பணி நியமனங்களுக்கு தடையாணை வெளியிடப்பட்டதன் காரணமாக, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தில் பணிபுரியும் பணியாளர்களுக்கு வழங்கப்பட்ட கருணை அடிப்படையிலான பணிநியமனங்களும் நிறுத்தி வைக்கப்பட்டன.

4. மேலே நான்கில் படிக்கப்பட்ட அரசாணையில் அரசுப் பணியாளர்களுக்கு கருணை அடிப்படையிலான பணி நியமனம் வழங்குவதற்கு விதிக்கப்பட்ட தடை விலக்கி கொள்ளப்பட்டு ஆணை வெளியிடப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் மேலே ஐந்தில் படிக்கப்பட்ட கடிதங்களில் பல்வேறு சத்துணவு பணியாளர்கள் / ஊழியர் சங்கங்கள் அரசுப் பணியாளர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்க ஆணையிடப்பட்டுள்ளதைப் போன்று புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி பணிகள் திட்டத்தில் பணிபுரியும் சத்துணவு அமைப்பாளர், சமையலர், உதவியாளர், குழந்தைகள் மைய பணியாளர் மற்றும் குழந்தைகள் மைய உதவியாளர்கள் ஆகியோர்களின் வாரிசுதாரர்களுக்கு மீண்டும் கருணை அடிப்படையிலான பணிநியமனம் வழங்குமாறு அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

5. மேலே ஐந்தில் படிக்கப்பட்ட பல்வேறு சத்துணவு பணியாளர்கள் / ஊழியர் சங்கங்களின் கோரிக்கையினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து, அவர்களது கோரிக்கையினை ஏற்று பின்வருமாறு ஆணை வெளியிடப்படுகிறது.

- அரசுப் பணியிடங்களில் காலிப்பணியிடங்களை பூர்த்தி செய்ய கருணை அடிப்படையிலான பணி நியமனங்களுக்கு விதிக்கப்பட்ட தடையாணை விலக்கிக் கொள்ளப்பட்ட நிலையில், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி பணிகள் திட்டம் ஆகிய திட்டங்களில் பணியாற்றி வரும்போது காலமான பணியாளர்களின் பெண் வாரிசுதாரர்களுக்கு சத்துணவுத் திட்டங்களில் சத்துணவு அமைப்பாளர் / குழந்தைகள் மைய பணியாளர் / சத்துணவு சமையலர், உதவியாளர் மற்றும் குழந்தைகள் மைய உதவியாளர்களாக பணி நியமனம் செய்ய அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. அவ்வாறு பணி நியமனம் செய்து விட்டு அது பற்றிய விவரங்களை அரசுக்கு தெரிவிக்க வேண்டும்.

- சென்னை மாநகராட்சி குழந்தைகள் மையங்களில் பணியாற்றும் பணியாளர்களின் பெண் வாரிசுதாரருக்கு கருணை அடிப்படையில் பணி வழங்க இயக்குநர், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி பணிகள் திட்டம், சென்னை –113 அவர்களுக்கும், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்ட பணியாளர்களின் பெண் வாரிசுதாரருக்கு கருணை அடிப்படையில் பணி வழங்க சமூக நல இயக்குநர் அவர்களுக்கும் அதிகாரம் வழங்கி ஆணை வெளியிடப்படுகிறது.

- மேற்காணும் கருணை அடிப்படையிலான பணி நியமனங்களுக்கு கல்வித் தகுதி, வயது, தூரச் சுற்றளவு பெண் வாரிசு இல்லாத நிலையில் ஆண் வாரிசுதாரருக்கு பணி வழங்குதல் போன்ற நேர்வுகளுக்கு விதித் தளர்வுகள் ஏதும் தேவைப்படின் அரசுக்கு தக்க முன்மொழிவுகளை அனுப்பி அரசின் முன் அனுமதி பெற வேண்டும் எனவும் ஆணை வெளியிடப்படுகிறது.

6. இவ்வாணை நிதித்துறையின் இசைவை அதன் அ.சா.கு.எண்.55490/சநு/07, நாள் 10-09-2007 ல் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

நா.ச.பழனியப்பன்,
அரசு செயலாளர்

பெறுநர்
இயக்குநர்,
சமூக நலத்துறை, சென்னை – 5.
இயக்குநர்,
ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி பணிகள் திட்டம், சென்னை – 113.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
அனைத்து மாநகராட்சி ஆணையர்கள்.
மாநில கணக்காயர், சென்னை – 18
தலைமைத் துறை தணிக்கை அலுவலர், சென்னை – 2
ஆணையாளர்,
கருவூலம் (ம) கணக்குத் துறை, சென்னை – 15
சம்பளக் கணக்கு அலுவலர்,
சென்னை (கிழக்கு, வடக்கு, தெற்கு)
சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்ட(சநு.7 பிரிவு), சென்னை – 9.
நகல்:-
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செயலாளர், சென்னை – 9.
மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 9.
பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்த துறை, சென்னை – 9
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, சென்னை – 9
நிதித்துறை, சென்னை – 9
இருப்புக் கோப்பு / உதிரி நகல்கள்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்